Registered as a News Paper
பக்கங்கள் 04

யாழ்ப்பாணம்
விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | வைகாசி 02 | [15-05-93] | சனிக்கிழமை | ஓசை 86

## கொழும்பிலிருந்து வந்த கொப்பிகள் மாணவருக்கு வழங்கப் போதாதாம்

யாழ். கல்வித்திணைக்களத்தால் குடாநாட்டு மாணவர்களுக்காக கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்ட அப்பியாசக்கொப்பியில் இருந்து மாணவன் ஒருவனுக்கு ஒரு பாடத்திற்கு ஒருசில ஒற்றைகள்தான் வழங்கப்படக்கூடியதாக உள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. இது பற்றி மேலும் தெரியவருவதாவது: குடாநாட்டில் ஏற்பட்ட கொப்பித் தட்டுப்பாட்டை அடுத்து, அதை நீக்கும் முகமாக யாழ். கல்வித் திணைக்களம் கொழும்பிலிருந்து கொப்பியை எடுத்துவந்து மாணவர்களுக்கு வழங்குவதெனத் தீர்மானித்தது. இதன் அடிப்படையில் மாணவன் ஒருவருக்கு எவ்வளவு கொப்பி தேவை என்றும் அதிபர்கள் மூலம் தரவுகள் பெறப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது. ஒரு மாணவனுக்கு ஆகக் (4 ஆம் பக்கம் பார்க்க)

# பிரேமாவைக் கொன்றவர் அவருடன் 6 சுற்றுப் பயணங்கள் சென்றவராம்

## சிறிலங்கா புலனாய்வுத்துறை தகவல்

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலைக்குக் காரணமானவர் என பொலிசாரால் கூறப்படும் தமிழ் இளைஞர் பிரேமதாசாவின் தனிப்பட்ட ஆறு விஜயங்களின் போது அவருடன் கூடவே சென்று வந்தார் என புலனாய்வுகளிலிருந்து தெரியவருவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

முக்கியமாக சென்ற மார்ச் மாதம் பிரேமதாசாவின் கதிர்காம விஜயத்தின்போது குலவீரசிங்கம் வீரகுமார் என்ற இந்த இளைஞர் ஹெலிக்கொப்டர் ஒன்றில் பிரேமதாசாவின் தனிப்பட்ட பாதுகாப்பு ஆலோசகர் மொகைதீனுடன் கூடவே சென்றார் என தெரிவிக்கப்படுகிறது. இவ் விஜயத்தின்போது பிரேமதாசா வெறொரு ஹெலிக்கொப்டரில் சென்றார் என்றும் ஒரே ஹெலிக்கொப்டரில் செல்லக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருந்தால் அன்றே பிரேமதாசாவைக் கொன்றிருப்பார் என்றும் சொல்லப்படுகிறது.

பின்னரும் ஐந்து விஜயங்களின்போது மொகைதீன் பிரேமதாசா ஆகியோருடன் இந்த தமிழ் இளைஞரும் சென்றிருந்தார் என்றும் சந்தர்ப்பம்கிடைக்காமையால்இவரது கொலை நடவடிக்கை தவிர்க்கப்பட்டிருக்கவேண்டும் எனவும் பொலிசார் கூறுகின்றனர்.

### சந்திக்கவும்

முல்லை மாவட்ட கல்வித் திணைக்களத்தைச் சார்ந்த உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் அனைவரும் [இதுவரைகடமைக்குத் திரும்பாதவர்கள், கடமை ஏற்காதவர்கள்] பிரதேசகல்விப்பணிப்பாளர் திரு. நா. தனிகாசலம்பிள்ளை அவர்களை யாழ்ப்பாணம் பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் 17-05-93 பி. ப. 3மணிக்கு நேரடியாகச் சந்திப்பதற்கு தவறாது சமுகமளிக்கும்படி வேண்டப்படுகின்றார்கள்.

### 18ஆம் திகதி முடிவுகள் வரலாம்

மாகாணசபைதேர்தல் வாக்குகள் 1056 நிலையங்களில் எண்ணப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு வாக்கு எண்ணிக்கை நிலையத்தில் பத்தாயிரம் வாக்காளரின் வாக்குகள் அளவிலேயே எண்ணப்படும்.

முதலில் தபால் மூலமான வாக்குகளே எண்ணப்படும். முடிவுகள் 18ஆம் திகதி அதிகாலையில் வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

குமண கப்பல் மூலம்

### அரச ஊழியர்கள் திருமலை செல்ல ஏற்பாடு

குடாநாட்டில் இருந்து ஒரு தொகுதி அரச ஊழியர்கள் எதிர்வரும் 22 ஆம் திகதி கப்பல் மூலம் திருக்கோணமலைக்குச் செல்ல உள்ளனர்.

மேலும் மேலதிக சிகிச்சை பெறுவதற்காக ஒரு தொகுதி நோயாளர்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி கப்பல் மூலம் திருக்கோணமலைக்குச் செல்ல இருப்பதாகவும் தெரியவருகிறது. இதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

### வவுனியா நகரில் பகலில் ஆயுதமுனையில் கொள்ளை

(கொழும்பு)

வவுனியா நகரசபைக் காரியாலயத்தில் செலுத்துவதற்கென எடுத்துச் செல்லப்பட்ட பெருந்தொகைப் பணம் வவுனியா நகரில் பட்டப்பகலில் ஆயுதமுனையில் கொள்ளை இடப்பட்டுள்ளது. வவுனியா நகரில் இருக்கும் சினிமாத் தியேட்டர் ஒன்றிலிருந்து வரிப்பணம் கட்டுவதற்காக எடுத்துச்செல்லப்பட்ட சுமார் பத்தொன்பதாயிரம் ரூபாவே ஆயுதமுனையில் இனந்தெரியாத நபர் ஒருவரால் கொள்ளையிடப்பட்டுள்ளது.

### இனப்பிரச்சினை குறித்து ஜப்பான் ஆழ்ந்த கவனம்

[யாழ்ப்பாணம்]

இலங்கை இனப்பிரச்சினை குறித்து ஜப்பான் ஆழ்ந்த கவனம் செலுத்தி வருவதாக அந்நாடு தெரிவித்துள்ளது.

பிரச்சினை விரைவில் தீர்ந்ததும் கூடுதல் உதவி வழங்கப்போவதாகவும் ஜப்பான் உறுதியளித்துள்ளது.

யாழ். மாவட்ட கஷ்டப்பிரதேச

### ஆசிரியர் வெற்றிடம் நிரப்புவதற்கு நடவடிக்கை

### பிரேமதாசா கொலைகள் புரிந்தாராம்

## 'ஏசியா வீக்' சஞ்சிகைக்கு சிறிலங்காவில் தடை

(கொழும்பு)

பயங்கரத்தின் ஆட்சி என்ற தலைப்பில் படுகொலை செய்யப்பட்ட ஜனாதிபதி பிரேமதாசா குறித்து மே 12 ஆம் திகதிய அட்டைப்பட தகவல்கள் கொண்ட ஏசியா வீக் சஞ்சிகை விநியோகம் செய்யப்படக்கூடாது என சிறிலங்கா அரசு தடை விதித்துள்ளது.

அரசியல் எதிரிகளைக் கொல்ல பிரேமதாசா உத்தரவிட்டார் என இச்சஞ்சிகையின் கட்டுரை கூறுகிறது. பிரேமதாசா குறித்து ஐந்து பக்கக் கட்டுரையை சிறிலங்கா பாதுகாப்புத் துறையினரும் தகவல் பிரிவினரும் தணிக்கை செய்த பின்பே பொதுமக்கள்

கட்சியை வைத்து ஆட்சி என்ற உப தலைப்பில் வெளியிடப்பட்ட பகுதிதான் சர்ச்சைக்குரிய பகுதியாக இருப்பதாகக் கூறப்படுகிறது. இலங்கையின் 2500 வருட வரலாற்றில் பிரேமதாசாவின் 4 வருட ஆட்சியே வன்முறை நிறைந்த ஆட்சியாக இருந்தது என இந்த ஹொங்கொங் சஞ்சிகை

### தென்மராட்சிப் பகுதியில் பலத்த எறிகணை வீச்சு

கட்டைக்காடு ஆனையிறவு சிறிலங்காஇராணுவ முகாமில் இருந்துநேற்றுநண்பகல்12.00 மணியளவில் மக்கள் வாழும் குடியிருப்புக்கள் மீது அகோர எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டது.

இவ் எறிகணைகள் சோரன்பற்று, மாசர், புதுக்காடு ஆகிய பகுதிகளில் விழுந்து வெடித்தன. இவ் எறிகணைகள் தென்னைமரத் தோட்டங்களிலும் வயல் வெளிகளிலும் விழுந்து வெடித்ததாக தெரியவருகின்றது.

இவ் எறிகணைத் தாக்குதல்கள் தொடர்ந்து நள்ளிரவு வரை மேற்கொள்ளப்பட்ட வண்ணம் இருந்தது. சேதவிபரங்கள் தெரியவரவில்லை. [86

### ஓய்வுபெற்ற ஆசிரியருக்கு ஒப்பந்தஅடிப்படை நியமனம்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு அமர்த்தப்படவுள்ளனர்.

இதற்கென ஓய்வுபெற்ற கலை/விஞ்ஞான/பட்டதாரி

பிறந்த திகதி, அடையாள அட்டை இலக்கம், கடைசியாக சேவையாற்றிய பாடசாலை, 44/90 இன் சுற்றறிக்கை பிரகாரம் இளைப்பாறியவரா, பட்டதாரியா அல்லது பயிற்றப்பட்டவரா, விசேட திறமை, ஆர்வம்,

## ஆயுதமுனையில் கொள்ளை

(கொழும்பு)

வவுனியா நகரசபைக் காரியாலயத்தில் செலுத்துவதற்கென எடுத்துச் செல்லப்பட்ட பெருந்தொகைப் பணம் வவுனியா நகரில் பட்டப்பகலில் ஆயுதமுனையில் கொள்ளை இடப்பட்டுள்ளது. வவுனியா நகரில் இருக்கும் சினிமாத் தியேட்டர் ஒன்றிலிருந்து வரிப்பணம் கட்டுவதற்காக எடுத்துச் செல்லப்பட்ட சுமார் பத்தொன்பதாயிரம் ரூபாவே ஆயுதமுனையில் இனந் தெரியாத நபர் ஒருவரால் கொள்ளையிடப்பட்டுள்ளது.

## இனப்பிரச்சினை குறித்து ஜப்பான் ஆழ்ந்த கவனம்

[யாழ்ப்பாணம்]

இலங்கை இனப்பிரச்சினை குறித்து ஜப்பான் ஆழ்ந்த கவனம் செலுத்தி வருவதாக அந்நாடு தெரிவித்துள்ளது.

பிரச்சினை விரைவில் தீர்ந்ததும் கூடுதல் உதவி வழங்கப்போவதாகவும் ஜப்பான் உறுதியளித்துள்ளது.

யாழ். மாவட்ட கஷ்டப்பிரதேச

## ஆசிரியர் வெற்றிடம் நிரப்புவதற்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள கஷ்டப்பிரதேச பாடசாலைகளிலுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கையினை யாழ். கல்வித் திணைக்களம் மிக துரிதமாக செயற்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கென ஆசிரியர் சேவையில் வெளிமாவட்டங்களிலோ அல்லது பருத்தித்துறை கிழக்கு, எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு மற்றும் நெடுந்தீவு போன்ற இடங்களில் உள்ள பாடசாலைகளிலோ கடமையாற்றாது தமது சேவைக் கடமையை தொடர்ந்து யாழ்ப்பாணப்பகுதியில் கடமையாற்றும் 50 வயதிற்கு உட்பட்ட ஆண், மற்றும் 40 வயதிற்கு உட்பட்ட பெண் ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியல்கள் தயாரிக்கப் படவுள்ளன.

இதற்கான அறிவுறுத்தல்கள் யாவும் சகல கோட்டக் கல்வி அலுவலகங்களிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ் ஆசிரியர்களைக் கொண்டே யாழ். மாவட்ட கஷ்டப்பிரதேச ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. [பா]

தாசாவின் தனிப்பட்ட பாதுகாப்பு ஆலோசகர் மொகை செல்லக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருந்தால் அன்றே பிரேம திருந்தார் என்றும் சந்தர்ப்பம்கிடைக்காமையால்இவரது

## பிரேமதாசா கொலைகள் புரிந்தாராம்

# 'ஏசியா வீக்' சஞ்சிகைக்கு சிறிலங்காவில் தடை

(கொழும்பு)

பயங்கரத்தின் ஆட்சி என்ற தலைப்பில் படுகொலை செய்யப்பட்ட ஜனாதிபதி பிரேமதாசா குறித்து மே 12 ஆம் திகதிய அட்டைப்பட தகவல்கள் கொண்ட ஏசியா வீக் சஞ்சிகை விநியோகம் செய்யப் படக்கூடாது என சிறிலங்கா அரசு தடை விதித்துள்ளது.

அரசியல் எதிரிகளைக் கொல்ல பிரேமதாசா உத்தர விட்டார் என இச்சஞ்சிகையின் கட்டுரை கூறுகிறது. பிரேமதாசா குறித்து ஐந்து பக்கக் கட்டுரையை சிறிலங்கா பாதுகாப்புத் துறையினரும் தகவல் பிரிவினரும் தணிக்கை செய்த பின்பே பொதுமக்கள் விநியோகத்திற்கு அனுமதிக்கப்படும் என சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கட்சியை வைத்து ஆட்சி என்ற உப தலைப்பில் வெளியிடப்பட்ட பகுதிதான் சர்ச்சைக்குரிய பகுதியாக இருப்பதாகக் கூறப்படுகிறது. இலங்கையின் 2500 வருட வரலாற்றில் பிரேமதாசாவின் 4 வருட ஆட்சியே வன்முறை நிறைந்த ஆட்சியாக இருந்தது என இந்த ஹொங்கொங் சஞ்சிகை விபரித்துள்ளது.

1991இல் பிரேமதாசாவை பதவி நீக்கம் செய்ய பாராளு

(4ஆம் பக்கம் பார்க்க)

## மீட்புநிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நாளை ஞாயிற்றுக்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதுவரை காலமும் மீட்புநிதிக் கட்டணைச் செலுத்தத் தவறியோர் இக்குறித்த நாளில் தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்தமுடியும் எனத் தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## மூன்று தமிழ் வாலிபர் நீர்கொழும்பில் கைது

நீர்கொழும்பு கடற்கரை வீதியில் மூன்று தமிழ் இளைஞர்கள் 13ஆம் திகதி வியாழக்கிழமை மாலையில் பொலிசாரினால் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் வடபகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் என்றும், விடுதலைப் புலிகளின் முன்னணி உறுப்பினர்கள் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்களிடமிருந்து பல முக்கிய தகவல்கள் பெறப்பட்டுள்ளனவாம்.

## முகலன் வீதி இளைஞர் பொலிஸ் காவலிலிருந்தவர்

### —சட்டத்தரணி தகவல்

கிருலப்பனை முகலன் வீதியில் சூட்டுக்காயங்களுடன் இறந்து கிடந்த இளைஞர் கிருலப்பனை பொலிசாரால் ஏறகனவே கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்தவர் என ஜனாதிபதி சட்டத்தரணி தயா பெரேரா தெரிவித்துள்ளார்.

மானிப்பாயைச் சேர்ந்த கந்தையா ரகுநாதன் என்னும் இளைஞர் கனடா செல்வதற்காக கொழும்பு சென்றார் எனவும் விசா கிடைப்பதில் ஏற்பட்ட தடங்கல்களால் அங்கு தங்கியிருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சந்தர்ப்பத்தில் இவர் கிருலப்பனை பொலிசாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

சம்பவம் நடப்பதற்கு முதல் நாள் இவரது தாயார் கிருலப்பனை பொலிஸ் நிலையம் சென்று அங்கு ரகுநாதனைச் சந்தித்துள்ளார். மறு நாளே இவர் சூட்டுக்காயங்களுடன் முகலன் வீதியில் இறந்து கிடந்தார்.

இவ்வாறு கொழும்பு உயர் மஜிஸ்ரேட் நீதிபதி எம். எஸ். சில்வாவைச் சந்தித்து அரச சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

## ...லைத் எறிகணை...

கட்டைக்காடு ஆனையிறவு சிறிலங்காஇராணுவ முகாமில் இருந்துநேற்றுநண்பகல்12.00 மணியளவில் மக்கள் வாழும் குடியிருப்புக்கள் மீது அகோர எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டது.

இவ் எறிகணைகள் சோரன்பற்று, மாசர், புதுக்காடு ஆகிய பகுதிகளில் விழுந்து வெடித்தன. இவ் எறிகணைகள் தென்னைமரத் தோட்டங்களிலும் வயல் வெளிகளிலும் விழுந்து வெடித்ததாக தெரியவருகின்றது.

இவ் எறிகணைத் தாக்குதல்கள் தொடர்ந்து நள்ளிரவு வரை மேற்கொள்ளப்பட்ட வண்ணம் இருந்தது. சேதவிபரங்கள் தெரியவரவில்லை. [86

## ஓய்வுபெற்ற ஆசிரியருக்கு ஒப்பந்தஅடிப்படை நியமனம்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு அமர்த்தப்படவுள்ளனர்.

இதற்கென ஓய்வுபெற்ற கலை/விஞ்ஞான/பட்டதாரி ஆசிரியர்கள்/விசேட பயிற்சி ஆசிரியர்கள்/ஆங்கில ஆசிரியர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

தெரிவு செய்யப்படுவோருக்கு அவர்கள் ஓய்வு பெறும் போதுபெற்றகடைசி சம்பளம் (படிகள் இன்றி) வழங்கப்படவுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது முழுப்பெயர், விலாசம், பிறந்த திகதி, அடையாள அட்டை இலக்கம், கடைசியாக சேவையாற்றிய பாடசாலை, 44/90 இன் சுற்றறிக்கை பிரகாரம் இளைப்பாறியவரா, பட்டதாரியா அல்லது பயிற்றப்பட்டவரா, விசேட திறமை, ஆர்வம், கடைசியாகப் பெற்ற சம்பளம் போன்ற விபரங்கள் அடங்கிய விண்ணப்பப்பத்திரத்தைப் பூர்த்தி செய்து முல்லை மாவட்ட பிரதேச கல்விப் பணிப்பாளரை எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மாவட்ட பிரதேச கல்விப் பணிமனையில் சந்திக்குமாறும் வரும்போது நேர்முகத் தேர்விற்கு சமுகமளிக்கத்தக்கவகையில்வருமாறும்கேட்கப்படுகின்றனர்.

## சர். செஞ்சிலுவை குழுவிற்கு புதிய வதிவிட பிரதிநிதி

(யாழ்ப்பாணம்)

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் புதிய யாழ். வதிவிடப் பிரதிநிதியாக பீற் சூவீஸர் [BEAT SCHWEZER] என்பவர் எதிர்வரும் 17ஆம் திகதிமுதல் கடமையாற்ற உள்ளார்.

இவர் நீண்டகாலமாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவில் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய யாழ். வதிவிடப் பிரதிநிதி கடந்தஆண்டு பெப்ரவரி மாதம் முதல் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆரம்பவிஞ்ஞானக்கல்விக்கு போதிய ஆசிரியர் இல்லை

[யாழ்ப்பாணம்]

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் ஆரம்ப விஞ்ஞானக் கல்வி கற்பிக்க ஆரம்பித்து ஆறு வருடங்களுக்கு மேல் ஆகின்றன. ஆனால், 6.25 சதவீதமான ஆரம்ப விஞ்ஞான ஆசிரியர்கள்தான் தொடர்ச்சியாக ஐந்து வருடங்களுக்கு மேல் இப்பாடத்தை கற்பித்து வருகிறார்கள். ஆரம்ப விஞ்ஞானக் கல்வியைக் கற்பிப்பதற்குத் திருப்திகரமான முறையில் ஆசிரியர்களைவழங்கத் தவறியமையே இந்த நிலைக்கான காரணமாகும். எமது பாடசாலைகளில் அடிக்கடி நடைபெறும் ஆசிரியர் இடமாற்றமும் இதற்கான மற்றொரு காரணமாகும். இவ்வாறு யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறைசிரேஷ்ட விரிவுரையாளர் கே. சின்னத்தம்பி தெரிவித்தார்.

யாழ். விஞ்ஞானக் கழகம் சார்பில் நடைபெற்ற கருத்தரங்கில் ''யாழ். கல்விமாவட்டத்தில் ஆரம்ப விஞ்ஞானக் கல்வி கற்பித்தல்'' என்னும் பொருள்பற்றிஆய்வுரைநிகழ்த்தும் போது, அவர் இவ்வாறு கூறினார்.

பாடப் பொருள் பற்றிய அறிவு கற்பித்தல் முறையில் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடும். க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைதல் ஆசிரியர் நியமனத்துக்கான அடிப்படைத்தகைமையாகும். ஆரம்ப விஞ்ஞான ஆசிரியர் மேற்படி பரீட்சையில் விஞ்ஞானபாடத்தில் சித்தியடையாவிட்டாலும், குறைந்த பட்சம் விஞ்ஞானத்தைப்படித்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வகையில் பார்த்தால் 52.6 சத வீதமான ஆரம்ப விஞ்ஞான ஆசிரியர்களுக்குப் போதிய அளவு விஞ்ஞானக் கல்வி அறிவு இல்லை என்றார் அவர்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

விஞ்ஞானக் கல்வி 4ஆம் ஆண்டிலிருந்து கற்பிப்பது யாழ். மாவட்டத்தில் 1985 இல் அறிமுகமானது. இங்குள்ள 490 பாடசாலைகளில் 442 பாடசாலைகளில் ஆரம்ப விஞ்ஞானத்தைக்கற்பிக்கிறார்கள். ஆரம்ப விஞ்ஞானக் கற்பித்தல் தொழிலில் 675 ஆசிரியர்கள் ஈடுபட்டுள்ளார்கள். எமது பாடசாலைகளில் 4,5 ஆம் ஆண்டு நேரசூசிகைகளை நிரப்பும் நோக்கத்துடன் நேரசூசிகையில் ஆரம்ப விஞ்ஞான பாடத்தைப் 'போட்டுக் கொடுக்கும்' வழக்கத்தை நிறுத்த வேண்டும்

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஆயர் கெனத்பெர்னாண்டோ யாழ். வருவதற்கு முயற்சி

### பிரட்மன் சந்தித்துப் பேசினார்

(கொழும்பு)

ஆங்கிலத் திருச்சபை ஆயர் வணக்கத்துக்குரிய கென்னத் பெர்னாண்டோவை ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்குரிய ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

மிகவிரைவில் யாழ்ப்பாணம் வரவுள்ள வணக்கத்துக்குரிய ஆயர் கென்னத் பெர்னாண்டோ தலைமையிலான நல்லெண்ணத் தூதுக்குழுவில் அரசின் சார்பாக அங்கத்தவர் ஒருவரையும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைப்பது குறித்தும் ஏனைய பல விடயங்கள் குறித்தும் பேசுவதற்காகவே மேற்படி சந்திப்பு பயன்படுத்தப்பட்டதாகவும் கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதைத்தொடர்ந்து நல்லெண்ணத் தூதுக்குழுவை யாழ்ப்பாணம் அழைத்துச் செல்லும் முயற்சியில் ஆயர் கென்னத் பெர்னாண்டோ தொடர்ந்து ஈடுபட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

இத்தூதுக்குழுவில் இரண்டு பௌத்தபிக்குகள் உட்பட முக்கிய அரசியல் கட்சிகளின் சார்பாக ஒவ்வொரு பிரதிநிதிகளும் சேர்ந்துகொள்வார்

(4ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## வியாபாரிகட்கு

லேஸ், நூல் வகைகள் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு அழகு சாதனப் பொருட்களை நிதான விலைக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள - ஜெயா அழகு சாதனமாளிகை 177A, மின நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-6613)

## துளிர்

சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ். மற்றும் சுபமங்களா, குன்றின் குரல், விருட்சம், சலனம், செம்மலர் போன்ற சஞ்சிகைகளும் தரமான புத்தகங்களும் விற்பனையாகின்றன. விபரங்கட்கு: வசந்தம், புத்தக நிலையம், 405, அருச்சுனா வீதி, (புதிய பஸ் நிலையம் முன்) யாழ்ப்பாணம். (4871)

## கசற்றேடியோக்களா! கடிகாரங்களா!!

உங்கள் கடிகாரங்களையும், றேடியோக்களையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள்: டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி (சி-6608)

## தவறிவிட்டது

குடும்ப அட்டையும் அதனுடன் புதிய இ' உணவு முத்திரையும் (மோ சிங்கராயர், சண்டிலிப்பாய் றோட், பண்டத்தரிப்பு) பற்றிக்ஸ் வீதிக்கும் ஸ்ரான்லி வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தமிழ்த்தாய் புத்தகசாலையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (4879)

## எண்ணெய் முழுக்கு

சீயக்காய், வெந்தயம், பயறு, எலுமிச்சங்கோது மற்றும் உடலுக்கும் கேசத்திற்கும் நலந்தரும் மூலிகைப் பொருள்கள் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒலிவ் ஸ்நானப் பவுடர் பாவியுங்கள். பயனடையுங்கள். பக்கற் ஒன்றின் விலை ரூ 3/-. ''மில்க்வைற்'' (சி-6626)

## தவறிவிட்டது

ஊரெழு சந்திக்கும் உரும்பராய் சந்திக்குமிடையில் முக்கால் பவுண் சங்கிலி ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. எடுத்தவர்கள் கீழே உள்ள விலாசத்தில் ஒப்படைக்கும்படி தய

---

கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்.

# லொறிக் கூலிக்கான கூறுவிலை

கொழும்பிலிருந்து நல்லூர் பூநகரிவரை பொருட்களை ஏற்றுவதற்கான கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் லொறி உரிமையாளர்கள் 20 05 1993 ஆம் திகதிக்கு முன்னர் ''பொது முகாமையாளர், கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி'' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

பொது முகாமையாளர். (சி 6616)

# அறிவித்தல்

சகல சங்க அங்கத்தவர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும், வருமதியாளர், செல்மதியாளர்களுக்கும்,

**கணக்குமீதிகளைச் சரிபார்த்தல்**

30-04 93 வரையான ஊர்காவற்றுறை ப.நோ கூ. சங்கத்துடனான கொடுக்கல், வாங்கல் சம்பந்தமான மீதிகளை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பார்வையிட்டு 30 05-93ஆம்திகதிக்கு முன் தங்கள் கணக்குகளைச் சீர் செய்து கொள்ளுமாறும், உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

பொது முகாமையாளர்,
ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம்.

(சி/6624)

---

வல்வெட்டித்துறை

றெயின்போஸ் கழகத்தால் நடாத்தப்பட்ட

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின்

# முடிவுகள்

**பரிசுக்குரிய இலக்கங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 2183 | 2ஆம் பரிசு | 3862 |
| 3ஆம் ,, | 4124 | 4ஆம் ,, | 1871 |
| 5ஆம் ,, | 3575 | 6ஆம் ,, | 1998 |
| 7ஆம் ,, | 3794 | 8ஆம் ,, | 0521 |
| 9ஆம் ,, | 4289 | 10 ஆம் ,, | 2280 |
| 11ஆம் ,, | 2962 | 12ஆம் ,, | 4263 |
| 13ஆம் ,, | 2721 | 14 ஆம் ,, | 3837 |
| 15ஆம் ,, | 0617 | 16ஆம் ,, | 0495 |
| 17ஆம் ,, | 2208 | 18 ஆம் ,, | 0549 |
| 19ஆம் ,, | 3460 | 20 ஆம் ,, | 4356 |
| 21ஆம் ,, | 3455 | 22ஆம் ,, | 0431 |
| 23ஆம் ,, | 1112 | 24ஆம் ,, | 1822 |
| 25 ஆம் ,, | 4498 | 26ஆம் ,, | 4576 |
| 27ஆம் ,, | 4268 | | |

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**திபாகர்**

---

# மாபெரும் மாட்டுவண்டிச் சவாரி

சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலைய ஆதரவில் இயங்கும் தீசன் பாலர் பாடசாலை வளர்ச்சிக்காக மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடைபெற உள்ளது.

இடம்: கந்தரோடை சவாரி மைதானம்
காலம்: 16-5 93 ஞாயிறு பி.ப 2 மணி

A.B.C என 3 குழுக்களாக பிரிக்கப்பட்டு தங்கப்பதக்கம் உட்பட பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

பிரவேசம் ரூபா 10/-

விளம்பர அன்பளிப்பு
**வினைல்ஸ் கல்வி நிலையம்**
kk.S. வீதி சுன்னாகம்

(4880)

# முக்கிய அறிவித்தல்

பருத்தித்துறை கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினால் 15-5-1993இன்று அதிர்ஷ்டம் பார்க்க இருந்த சீட்டிழுப்பு 3-7-1993 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என அறியத்தருகிறோம்.

பொறுப்பாளர்
க. இ. ஒன்றியம்,
பருத்தித்துறை

(4874)

# தேவை

கீழ்க்காணும் பதவிகளுக்கு கல்வித் தகைமையும முன் அனுபவமும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

- மொழிபெயர்ப்பாளர்கள் : ஆங்கிலம் - தமிழ், சிங்களம் - தமிழ்
- மொழிபெயர்ப்பாளர்கள் : தொழில் நுட்பம். இயந்திரவியல்.
- அச்சுக்கோப்பாளர்கள்.
- ஓவியர்கள் (வயது 18 - 30)

விண்ணப்ப முடிவு திகதி : 25-05-1993 க்கு முதல்

விளம்பர இல. 187
மே / பா ஈழநாதம்
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்

(4878)

# கண்ணீர் அஞ்சலி

செல்வன்

**குலசிங்கம் சிவகுமார்**

[3-ம் வருட பௌதிக விஞ்ஞானபீட மாணவன்
யாழ். பல்கலைக்கழகம்]

| அன்னையின் மடியில் | ஆண்டவனின் அடியில் |
|---|---|
| 10. 06. 1967 | 14. 05. 1993 |

---

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ். கிளைத் தலைமையகம்
யாழ். கிளை மன்ற ஆண்டுப்

# பொதுக் கூட்டம் - 1993

மேற்படி கூட்டம் 16 - 05 - 1993 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல 9. 00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். பிரிவுப் பிரதிநிதிகளை அன்புடன் அழைக்கின்றோம்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
14 - 05 - 1993

கௌரவ செயலாளர்

(சி- 6629)

# 8-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரப்பிறப்பு
16-08-64

வீரச்சாவு
14-05-85

**லெப். பிரசன்னா**
(இரத்தினம் சதானந்தன்)

தமிழ் மண் காக்க தமிழர் மானம் காக்க
விழுப்புண் ஏற்ற வீரமறவா
மங்காது மறையாது உன் புகழ்
நீங்காது எம்மனதை விட்டு என்றும்

118, உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

- குடும்பத்தினர்.
[4882]

# நினைவு கூருகின்றோம் ...
# 1993-05-15

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் தமிழீழக் கடற்பரப்பில் (நயினாதீவு) சிறிலங்கா கடற்படையினரால் ''குமுதினி'' என்னும் பயணிகள் படகினுள் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட குழந்தைகள் உட்பட பல தமிழர்கள்.

1986 ஆம் ஆண்டு மட்டுநகரில் சிறிலங்கா அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து அடித்துக்கொலை செய்யப்பட்டு எம்மைப்பிரிந்த,

சிங்கோமாஸ்ரர் (கந்தையா பகவத்சிங் - வந்தாறுமூலை, மட்டு)

மட்டு-வாழைச்சேனை கிண்ணியாப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் முற்றுகையிட்டு மேற்கொண்ட நடவடிக்கையில ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய.

★ ந. குட்டிமணி (பாலம்போட்டாறு, தம்பலகமம் -திருமலை)

1987 ஆம் ஆண்டு மட்டு-தியாவெட்டவான் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு சுட்டுக்கொலை செய்யப்பட்ட,

தகசாலையில் ஒப்படைக்கவும்.
சன்மானம் வழங்கப்படும்.
(4879)

## எண்ணெய் முழுக்கு

சீயக்காய், வெந்தயம், பயறு, எலுமிச்சங்கோது மற்றும் உடலுக்கும் கேசத்திற்கும் நலந்தரும் மூலிகைப் பொருள்கள் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒலிவ் ஸ்நானப் பவுடர் பாவியுங்கள். பயனடையுங்கள். பக்கற் ஒன்றின் விலை ரூ 3/-.
''மில்க்வைற்'' (சி-6626)

## தவறிவிட்டது

ஊரெழு சந்திக்கும் உரும்பராய் சந்திக்குமிடையில் முக்கால் பவுண் சங்கிலி ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. எடுத்தவர்கள் கீழே உள்ள விலாசத்தில் ஒப்படைக்கும்படி தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம். சன்மானம் வழங்கப்படும். கோ. பவானி, 182¼ யாழ். மா. சி. க. கூ. ச. சமாசம். ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (4883)

## வருடாந்த பொதுக் கூட்டம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க, யாழ் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம், நாளை முற்பகல் 9 00 மணிக்கு. யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற இருக்கிறது யாழ் மாவட்டத்திலுள்ள 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்தும் பல பிரதிநிதிகள் இக் கூட்டத்திற்குசமுகம் அளிப்பார்கள்என எதிர்பார்க்கப்படுகிறது வருடாந்த அறிக்கை, கணக்கறிக்கை ஆகியன சமர்ப்பிக்கப்படும். மகோன்னத சேவைகள் செய்த தொண்டர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர் என்று தெரியவருகிறது.


பாரதிதாசன்
கல்வி நிறுவனம்
(BECON)
ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.

பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

G,A.Q 1994 ஏப்ரல்
B. A 1994 ஏப்ரல்

பொருளியல்
S. வரதராஜன்
B.A. (Hons.)

ஆரம்பம்: 16.5.93
ஞாயிறு 1. 00 p.m
(சி/6609)


## பரிசுக்குரிய இலக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 2183 | 2ஆம் பரிசு | 3862 |
| 3ஆம் ,, | 4124 | 4ஆம் ,, | 1871 |
| 5ஆம் ,, | 3575 | 6ஆம் ,, | 1998 |
| 7ஆம் ,, | 3794 | 8ஆம் ,, | 0521 |
| 9ஆம் ,, | 4289 | 10ஆம் ,, | 2280 |
| 11ஆம் ,, | 2962 | 12ஆம் ,, | 4263 |
| 13ஆம் ,, | 2721 | 14 ஆம் ,, | 3837 |
| 15ஆம் ,, | 0617 | 16ஆம் ,, | 0495 |
| 17ஆம் ,, | 2208 | 18 ஆம் ,, | 0549 |
| 19ஆம் ,, | 3460 | 20 ஆம் ,, | 4356 |
| 21ஆம் ,, | 3455 | 22ஆம் ,, | 0431 |
| 23ஆம் ,, | 1112 | 24ஆம் ,, | 1822 |
| 25 ஆம் ,, | 4498 | 26ஆம் ,, | 4576 |
| 27ஆம் ,, | 4268 | | |

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**திபாகர்**
**எரிபொருள் நிலையம்**
தெணியம்பை, வல்வெட்டித்துறை.
(4867)

## 31-ம் நாள் கண்ணீர் அஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு: 02 — 05 — 1909



உதிர்வு: 15 — 04 — 1993

அமரர்
## கார்த்திகேசு அமிர்தலிங்கம்

வையகம் மீது எம்மை வளத்துடன் வாழவைத்த
தெய்வமே

உம்மை நாங்கள் எப்படி மறப்பதையா
இத்தரை மீது இவ்வுடல் தாங்க மட்டும்
நித்தமும் உம்நினைவ நெஞ்சத்தில் சுமந்து
நிற்போம்.

எமது அன்புத் தெய்வத்தின் பிரிவில் பலவேறு வழிகளிலும் பங்குகொண்டு எமக்கு ஆறுதலளித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது அன்புமிகு நன்றிகள்.

இன்று (15-05-93) எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பு மனைவி,
அருமைப் பிள்ளைகள்,
அன்பு மருமக்கள்,
ஆசைப் பேரப்பிள்ளைகள்.

உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.
(4864)

இயந்திரவியல்.
❋ அச்சுக்கோப்பாளர்கள்.
❋ ஓவியர்கள் (வயது 18 - 30)

விண்ணப்ப முடிவு திகதி : 25-05-1993 க்கு முதல்

விளம்பர இல. 187
மே / பா ஈழநாதம்
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்
(4878)

## கண்ணீர் அஞ்சலி

செல்வன்
## குலசிங்கம் சிவகுமார்
[3-ம் வருட பௌதிக விஞ்ஞானபீட மாணவன்
யாழ். பல்கலைக்கழகம்]

| அன்னையின் மடியில் | ஆண்டவனின் அடியில் |
|---|---|
| 10. 06. 1967 | 14. 05. 1993 |


அன்னாரின் திடீர் மறைவையொட்டி ஆழ்ந்த அதிர்ச்சியடைவதுடன் அவருக்கு எமது கண்ணீரஞ்சலியைச் செலுத்துவதுடன் அவரின் பிரிவால் துயருறும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும், ஆறுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
S.S.U
(4876)

## கண்ணீர்ப் பூக்கள்

அன்னையின் மடியில்
10 - 06 - 1967

காலதேவனின் பிடியில்
14 - 05 - 1993



செல்வன்
## குலசிங்கம் சிவகுமார்
(3ஆம் வருட பௌதிக விஞ்ஞானபீட மாணவர்)
யாழ். பல்கலைக்கழகம்

பல்கலையும் கற்கவென்று
பலநூறு ஆசைகொண்டு
பக்குவமாய்ப் பயின்றிட்ட-தோழா
பட்டதுன்பம், பயின்ற கலை
பட்டமாய் பருணமிக்கும்
பக்குவம் நெருங்குகையிலே
பாவி அவன் உன்னுயிரை
பறித்திட்ட நியாயமேதோ?

அன்னாரின் பிரிவிற்கு எமது கண்ணீர்ப்பூக்களை காணிக்கையாக்குவதுடன், அவரின் பிரிவால் துயருறும் பெற்றோர், உறவினர். நண்பர்கள் அனைவருக்கும், எமது ஆழ்ந்த அநுதாபங்களை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

3ஆம் வருட பௌதிக விஞ்ஞானபீட
மாணவர்கள்.
(4875)

## நினைவு கூருகின்றோம் ...
## 1993-05-15

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் தமிழீழக் கடற்பரப்பில் (நயினாதீவு) சிறிலங்கா கடற்படையினரால் ''குமுதினி'' என்னும் பயணிகள் படகினுள் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட குழந்தைகள் உட்பட பல தமிழர்கள்.

1986 ஆம் ஆண்டு மட்டுநகரில் சிறிலங்கா அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து அடித்துக்கொலை செய்யப்பட்டு எம்மைப்பிரிந்த,

சிங்கோமாஸ்ரர் (கந்தையா பகவத்சிங் - வந்தாறுமூலை, மட்டு)

மட்டு-வாழைச்சேனை கிண்ணியாப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் முற்றுகையிட்டு மேற்கொண்ட நடவடிக்கையில ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய.

★ ற. குட்டிமணி (பாலம்போட்டாறு, தம்பலகமம் -திருமலை)

1987 ஆம் ஆண்டு மட்டு-தியாவெட்டவான் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு சுட்டுக்கொலை செய்யப்பட்ட,

டெனி (விஜயபாலா ரவிச்சந்திரன்-தியாவெட்டவான், ஓட்டமாவடி-மட்டு)

1988 ஆம் ஆண்டு அம்பாறை-அக்கரைப்பற்றுப் பகுதியில் இந்தியப்படையினர்மேற்கொண்டசுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

கமல் (சின்னத்தம்பி ஆத்மலிங்கம் - அக்கரைப்பற்று-அம்பாறை)

மல்லாவியில் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் விவசாயி.

1989 ஆம் ஆண்டு மணலாறு-நெடுங்கேணிப் பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த இந்தியப்படையினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது விழுப்புண் அடைந்து சிகிச்சைக்காக தமிழகம் செல்லும்போது வீரச்சாவெய்திய,

லெப்.கேணல் நவம்/டடி (செல்லப் பெருமாள் அருமைராசா-கொக்குத்தொடுவாய்-மணலாறு)

திருமலையில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

மிருசுவிலில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்ய பட்ட களுவங்கேணி 01 ஐச் சேர்ந்த கடற்றொழிலாளியான தமிழிளைஞன்.

1991 ஆம ஆண்டு மட்டு-குடாவெட்டையில் எதிர்ப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

மேஜர் குலதீபன் (நாகலிங்கம் சச்சிதானந்தம்-களுவாஞ்சிக்குடி-மட்டு)

தயாநிதி (சின்னத்தம்பி கலாநிதி-அம்பிலாந்துறை-மட்டு)

மட்டு-வலதுகரைக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

2ம்-லெப். நிலான் (வைத்திலிங்கம் ஜெயகாந்தன்-கொம்மாதுறை-மட்டு)

தங்கநேசன்/ஆனந் (சிதம்பரப்பிள்ளை சுந்தரலிங்கம்-வாழைச்சேனை-மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக் குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**
(சி-6625)

### சிந்தனைக்கு

கொலை, நஞ்சினாலும், வாளாலும் மட்டுமல்ல, சட்டபூர்வமான வழிகளிலும் லாபகரமானதாக-நியாயம் கற்பிக்கப்படக் கூடியதாக செய்யப்படலாம்.

- ஆகட்டன் பிரபு.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 15-05-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## பாவங்களில் பங்கு ஏற்றுக் கொள்வார்களா?

ஒருவரின் வாரிசாக அவரின் பதவிக்கும், அந்தஸ்திற்கும் உரிமை கோருபவர்கள் அவருடைய கடந்த கால நடவடிக்கைக்கும், அதன் விளைவுகளுக்கும் பொறுப்பேற்க வேண்டும். அதைவிடுத்து பதவிக்கும், அதிகாரத்திற்கு மட்டும் உரிமை கோருதல் என்பது விதைக்காமல் அறுவடை செய்யும் ஒரு வகை மோசமான நடவடிக்கைக்கு ஒப்பானது.

தென்னாசியாவைப் பொறுத்து அரசியலில் 'பிரகாசித்த' கணவன்மார்களை இழந்த மனைவியர் அவர்களின் வாரிசுகளாக அரசியலில் பிரவேசிப்பது ஒன்றும் புதுமையானதல்ல. அதிலும், இலங்கையில் இதன் வரலாறு 1958ஆம் ஆண்டிலிருந்தே ஆரம்பமாகியுள்ளது. இந்த வரிசையில் சிறிமாவோ பண்டாரநாயக்கா, சந்திரிகா குமாரணதுங்கா, ஹேமா பிரேமதாசா, சிறிமானி லலித்அத்துலத் முதலி எனப்பட்டியல் தொடர்ந்து செல்கின்றது.

கணவனை இழந்த பெண்களோ, அன்றி திருமணமான பெண்களோ அரசியலில் ஈடுபடுவதென்பது தவறானதோ, எமக்கு அபிப்பிராய பேதமுடையதோ அல்ல. ஆனால், அரசியலில் அவர்கள் மூலதனமாகப் பயன்படுத்த முற்படும் அம்சங்களும், அவர்கள் தமது கணவன்மாரின் அரசியல் வாரிசுகளாகத் தம்மை நிலைநிறுத்த முற்படுவதுமே சங்கடத்திற்குரிய தொன்றாகவும், ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகவும் உள்ளது.

1958ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க சுட்டுக் கொல்லப்பட்டபோது, சிறிமாவோ அரசியலமைப்பிலுள்ள ஓட்டையைப் பயன்படுத்தி அரசியலுக்குள் நுழைந்ததோடு, நாட்டின் பிரதம மந்திரியுமானார். ஆனால், அவர் தனது கணவன் இருந்த காலத்தில் அரசியலில் பெரியளவில் தொடர்போ, ஈடுபாடோ கொண்டிருக்கவில்லை.

இதன் பின்னர், சந்திரிகா குமாரணதுங்கா தனது கணவனின் மரணத்துடன் அவருடைய வாரிசாக பொறுப்பை ஏற்றார். இன்று, ஹேமா பிரேமதாசாவும், சிறிமானி அத்துலத்முதலியும், தமது கணவன்மாரின் இடத்தை நிரப்புவதற்குத் தயாராகின்றனர். இவர்களும், முன்னவர்கள்

## மட்டு. 6000 பெண்கள் குடும்பதலைவரை இழந்தனர்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதல்கள் காரணமாக சுமார் 6000 இளம் பெண்கள் தமது குடும்பத் தலைவர்களை இழந்துள்ளனர் இவர்களில் பெரும்பாலானோர் 17 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று திரட்டிய விபரங்களில் இருந்து இத்தகவல் தெரிய வந்துள்ளது. இவ் விபரங்கள் முழுமையற்றதாகையால் இத்தொகை மேலும் அதிகமாக இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

## ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

1990ஆம் ஆண்டு யூன் மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையுமுள்ள காலப் பகுதியில் யாழ். கல்வித் திணைக்களத்தில் சேவையாற்றிய அலுவலர்கள், இலங்கை கல்விச் சேவை அலுவலர்கள் அதிபர்கள் மற்றும் ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் அனைவருக்கும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

இதற்கென சுமார் 45 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்து தருமாறு வட கிழக்குமாகாண கல்விஅமைச்சை யாழ்.கல்வித் திணைக்களம் கடந்த மார்ச் மாதம் 12ஆம் திகதியில் கோரியிருந்தது.

இராணுவ நடவடிக்கை காரணமாக இக் காலப்பகுதியில் அநேகமான பாடசாலைகள் இடம்பெயர்ந்த நிலையில் ஆவணங்கள் இன்றி இயங்கி வருகின்றமையால் வரவுக்கேற்ப ஊக்குவிப்புப்படிக் கொடுப்பனவைச் செய்வதற்கு பதிலாக மாதாந்த சம்பளத்தின் 50 வீதத்தை ஊக்குவிப்புப் படியாகக் கொடுப்பனவு செய்வதற்கு அனுமதி தருமாறு வட கிழக்கு மாகாண கல்வி அமைச்சை யாழ். கல்வித் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.

இதற்கான அனுமதியும், நிதி ஒதுக்கீடும் கிடைத்ததும் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். (பா)

## கெற்பலி ஆசிரியர்களுக்கு கஷ்ட பிரதேச படி

கெற்பலியில் இயங்கும் யா/புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாதன் வித்தியாலயத்துக்கு 01.05.93 தொடக்கம் வேலணைக்கோட்டத்தினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு கஷ்டப்பிரதேச படியும், சம்பளமும் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தினால் வழங்கப்படும் என யாழ். பிரதேசகல்விப்பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் யா/ஈ.ரி. ஏ/192 இலக்க 10 05.93 கடிதப்படி தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டஆசிரியர்கள் தமது வரவுச் சான்றிதழை ஒவ்வொரு மாதமும் யா/புங்குடுதீவு ஸ்ரீசண்முகநாதன் வித்தியாலய அதிபரிடமிருந்து பெற்று யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய அதிபரிடம் ஒப்படைத்தே தமது சம்பளத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் மேலும் இக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு வேலணைக் கோட்டத்தினால் மேற்படி பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் ஒரு வருடத்துக்கே இப் பாடசாலைக்குவிடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அது முடிந்ததும் தமது பழைய பாடசாலைகளுக்கு திரும்பலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (17)

## சர்வதேச அவதானிகளுக்கு 'ஐலன்ட்' கிடைக்க ஏற்பாடு

(கொழும்பு)

கொழும்பு ஒப்ராய் ஹொட்டலில் தங்கியிருக்கும் சர்வதேசத் தேர்தல் கண்காணிப்பாளருக்கு ஐலன்ட் பத்திரிகை மறுக்கப்பட்டிருப்பதாகத் ஐலன்ட் உட்பட அனைத்துப் பத்திரிகைகளையும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா தெரிவித்தார். சிங்கள மற்றும்

# அரசியல் தலையீடுகளால் பௌத்தத்திற்கு களங்கம்

### - மாதுளுவாவே சோபித தேரோ

(கொழும்பு)

அரசியல் வாதிகளிடமிருந்து தப்பி வாழ்வது இன்று பௌத்த பிக்குகளுக்கு கடினமான ஒரு காரியமாக இருக்கிறது. எவரேனும் ஒருவருக்கு சார்பாக செயற்பட்டால் ஊரவர்களைப் பகைத்துக் கொள்ள நேரிடுகிறது. இவ்வாறு கோட்டே சிறீ நாகவிகாரை அதிபதி வண. மாதுளுவாவே சோபித தேரோ கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்: அண்மைக்காலத்தில் பௌத்த சாசனத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட அரசியலே பிரதான காரணம். பௌத்த தர்மம் கட்சிகளாப் பிரிவு படுவது ஏற்ற செயல்அல்ல.

அரசியல் தலையீட்டால் ஐ. தே. க விகாரை, சுதந்திரக்கட்சி விகாரை என்றெல்லாம் விகாரைகளை உருவாக்கி விடலாகாது. அப்படியான ஒரு நிலைதான் கிராம விகாரைகளுக்கு ஏற்பட்டது.

அத்துடன் தானதர்மங்கள் இடம்பெறும் போதும் பான்சகுல நடைபெறும் போது தான் பௌத்த பிக்குமாரைக் காணமுடிகிறது. சாதாரண சவப்பெட்டிக் கடைகளுக்கு கூட பான்சகுல வழங்குவதற்காக பிக்குமார் செல்கின்றனர். கிராமத்துக்கும் விகாரைக்கும் இடையே உறவு முறிந்துவிட்டது இதை மீண்டும் கட்டி எழுப்ப வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

### ஊழியருக்கும் கிடைக்கும்

எதிர்வரும் 1 ஆம் திகதி தொடக்கம் சகல அரச ஊழியர்களுக்கும் மற்றும் ஓய்வூதியம் பெறுவோருக்கும் மாதாந்தம் அதிகரிக்கப்படவுள்ள 600 ரூபா மேலதிகக் கொடுப்பனவு கூட்டுறவு ஊழியர்களுக்கும் கிடைக்கவுள்ளது.

### அகதிமுகாமிலிருந்து மக்கள் வெளியேறினர்

(மன்னார்)

பேசாலையில் வீடுகளை இழந்து அகதி முகாமில் வாழ்ந்த குடும்பங்களில் சில அச்சத்தால் அகதி முகாமை விட்டு வெளியேறி பேசாலை பாத்திமா வித்தியாலயத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து கடந்த வருடம் தாயகம் திரும்பிய பேசாலைமக்களில்சிலர் தங்கள் வீடுகளில் பொலிசார் குடியிருந்ததால் அகதி முகாமில் வாழ்ந்து வந்தனர்.

அண்மையில் பேசாலையில் சில கடைகள் இனந்தெரியாத நபர்களால் எரிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஓலைக் கொட்டிலான அகதி முகாமும் எரிக்கப்படலாம் என்ற அச்சத்தினால் இவர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

தங்கள் சொந்த வீடுகளில் மீளக்குடியேற வழி செய்ய

## தேர்தல் தொடர்பாக 360 முறைப்பாடுகள்

(கொழும்பு)

இம்மாதம் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பாக இதுவரை 360 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகப் பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பயமுறுத்தல் மற்றும் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாகவே இந்த முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தேர்தற் களத்தில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் இந்த முறைப்பாடுகளைப் பொலிஸ் நிலையங்களில் பதிந்துள்ளன.

## பிரேமா கொலை தொடர்பாக 8 பேர் கொழும்பில் கைது

லலித் அத்துலத்முதலி, பிரேமதாசா ஆகியோரின் கொலைகளுடன் தொடர்பான கொலையாளியுடன் தொடர்புடைய 8 பேர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்

கொழும்பின்பல்வேறு இடங்களிலும் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நடத்திய திடீர் தேடுதல்களின் போதே இவர்கள் கைதானதாக பொலிசார் தெரிவித்தனர்.

## வேட்பாளருக்கு ஆயுதம் எம்மால் வழங்க முடியாது

### பொலிசார் தெரிவிப்பு

மாகாணசபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு பாதுகாப்பிற்கென தம்மால் ஆயுதங்களை வழங்க முடியாது என பொலிஸ் அதிகாரிகள் கைவிரித்துள்ளனர். தேர்தல் விவகாரங்களை கவனித்து வரும் பொலிசார் தம்மால் ஆயுதங்களை வழங்க முடியாது, ஆனால் வேட்பாளருக்கு முழு பாதுகாப்பு வழங்க முடியும் என உறுதி வழங்கியுள்ளனர்.

இது குறித்து கருத்து வெளியிட்ட உயர் பொலிஸ் அதிகாரியொருவர் தனிப்பட்ட பாதுகாப்பிற்கென ஆயுதம் வழங்கும் விடயத்தில் பொலிசாருக்கு எந்தவிதஅதிகாரமும் கிடையாது. இது பாதுகாப்பு அமைச்சைப் பொறுத்த விடயம் எனக்கூறினார்.

## பட்டப்பகலில் வழிப்பறி ரூ. 5,55,000 கொள்ளை

### கொள்ளுப்பிட்டியில் சம்பவம்

[கொழும்பு]

கொள்ளுப்பிட்டியில் கடந்த திங்களன்று பட்டப் பகலில் 5,55,000 ரூபா வழிப்பறிக் கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. காரில் பயணம் செய்தவர்களிடமிருந்து துப்பாக்கி முனையில் பணம் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டையிலுள்ள தொழில் முகவர் நிலைய ஊழியர் ஆறு பேர் காரில் சென்றனர். முகவர் நிலைய ஊழியர் ஆறு பேர் காரில் இருந்தனர். டுப்பிளிக்கேஷன் வீதியில் மாநலமாக் கல்லூரி அருகில் கோர்டீனா காரில் வந்த கோஷ்டி ஒன்று முகவர் நிலையத்திற்குச் சொந்தமான காரை இடைமறித்துக் காசைக் கொள்ளை அடித்துள்ளது. கொள்ளைக் கோஷ்டியில் நான்கு பேர் இருந்தனர். துப்பாக்கியுடன் பாய்ந்த

முடையதோ அல்ல. ஆனால், அரசியலில் அவர்கள் மூலதனமாகப் பயன்படுத்த முற்படும் அம்சங்களும், அவர்கள் தமது கணவன்மாரின் அரசியல் வாரிசுகளாகத் தம்மை நிலைநிறுத்த முற்படுவதுமே சங்கடத்திற்குரிய தொன்றாகவும், ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகவும் உள்ளது.

1958 ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்க சுட்டுக் கொல்லப்பட்டபோது, சிறிமாவோ அரசியலமைப்பிலுள்ள ஓட்டையைப் பயன்படுத்தி அரசியலுக்குள் நுழைந்ததோடு, நாட்டின் பிரதம மந்திரியுமானார். ஆனால், அவர் தனது கணவன் இருந்த காலத்தில் அரசியலில் பெரியளவில் தொடர்போ, ஈடுபாடோ கொண்டிருக்கவில்லை.

இதன் பின்னர், சந்திரிகா குமாரணதுங்கா தனது கணவனின் மரணத்துடன் அவருடைய வாரிசாக பொறுப்பை ஏற்றார். இன்று, ஹேமா பிரேமதாசாவும், சிறிமானி அத்துலத்முதலியும், தமது கணவன்மாரின் இடத்தை நிரப்புவதற்குத் தயாராகின்றனர். இவர்களும், முன்னவர்கள் போலவே, தமது கணவன்மார் உயிருடன் இருக்கும் போது அரசியலில் பெருமளவு ஈடுபாடு கொண்டவர்களே, அன்றி பங்காற்றியவர்களோ அல்ல. சிலவேளை இவர்கள் அரசியலில் அபிலாசை கொண்டிருப்பினும், அதனை வெளிப்படுத்தவில்லை. ஆனால், கணவன்மார் இறந்ததும் அவர்களின் பதவிகளை நிரப்பவும், அபிலாசைகளில் தங்களை நிறுத்திப்பார்க்கவும் விழைகின்றனர். அத்தோடு, அரசியலமைப்பு ஓட்டைகளையே இவர்களும் தேடிக்கொண்டிருக்கின்றனர்.

இவர்கள் யாவரும் தமது அரசியலில் முதலீடாக கணவன்மாரின் மரணத்தினால் உருவான அனுதாப அலையையே நாடி நிற்கின்றனர். இது ஓரளவிற்கு அவர்களுக்கு பெரும் லாபகரமான தொன்றாகவே அமைந்துள்ளது. அதோடு இவர்களை அரசியலில் பயன்படுத்த முற்படுபவர்களுக்கும் லாபகரமான தொன்றாகவே உள்ளது.

ஆனால், இவர்களில் எவரும் தமது கணவன்மாரின் வாரிசுகளாக தம்மை வரித்துக் கொள்ளும் போது அவர்களின் அரசியல் வரலாற்றில் உள்ள கறைபடிந்த பகுதிகளை திறந்து பார்க்கவோ, அன்றி அதற்குப் பதில் கூறவோ தயாராக இல்லை. எடுத்துக்காட்டாக சிறிமானி லலித் அத்துலத்முதலி அவரது கணவரின் தனிப்பட்ட வாழ்விலும், அரசியல் வாழ்விலும் உள்ள இரத்தக்கறை படிந்த பகுதியை கண்டு கொள்ளப்போவதில்லை.

இதே போன்றே ஹேமா பிரேமதாசாவும் தனது கணவரின் அரசியல் வாழ்வில் உள்ள பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலி கொண்ட, இரத்தம் தோய்ந்த பகுதியை கண்டு கொள்ளப் போவதில்லை. ஆனால் இது ஏற்புடைய தொன்றல்ல. தமது கணவன்மாரின் வாரிசாக முற்படும் இவர்கள், அவர்களின் ஆஸ்திக்கு உரிமை கோரும் இவர்கள் அவர்களின் இரத்தம் தோய்ந்த அடுத்த பக்கத்தையும் புரட்டிப்பார்க்க தயாராக வேண்டும்.

அவ்வாறு தயாராக இருப்பார்களேயானால் தமது கணவன்மார் அரசியல் வாழ்க்கையில் தமது அபிலாசைகளை நிறைவு செய்து மேற்கொண்ட அரசியல் சதிகள், படுகொலைகள், மோசடிகள் என்பனவற்றையும் பொறுப்பேற்க வேண்டும். ஏனெனில், இவற்றின் மூலமே இவர்கள் தம்மை 'புகழ்பூத்த' அரசியல் தலைவர்கள் ஆக்கிக்கொண்டவர்கள். அதைவிடுத்து, கணவன்மாரின், பதவிகளை மாத்திரம் கைப்பற்ற முயற்சிப்பது ஒரு திருடனின் சொத்தில் மற்றவர் சுகபோகம் காண முற்படுவது போன்றது.

---

யப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு கஷ்டப்பிரதேச படியும், சம்பளமும் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தினால் வழங்கப்படும் என யாழ். பிரதேசகல்விப்பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் யா/ஈ.ரி. ஏ/192 இலக்க 10 05.93 கடிதப்படி தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் தமது வரவுச் சான்றிதழை ஒவ்வொரு மாதமும் யா/புங்குடுதீவு ஸ்ரீசண்முகநாதன் வித் கொள்ள வேண்டும் எனவும் மேலும் இக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு வேலணைக் கோட்டத்தினால் மேற்படி பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் ஒரு வருடத்துக்கே இப் பாடசாலைக்குவிடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அது முடிந்ததும் தமது பழைய பாடசாலைகளுக்கு திரும்பலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (17)

## சர்வதேச அவதானிகளுக்கு 'ஐலண்ட்' கிடைக்க ஏற்பாடு

(கொழும்பு)

கொழும்பு ஒப்ராய் ஹொட்டலில் தங்கியிருக்கும் சர்வதேசத் தேர்தல் கண்காணிப்பாளருக்கு ஐலண்ட் பத்திரிகை மறுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒப்ராயில் அமைக்கப்பட்டுள்ள செயலகத்தின் மூலம் ஐலண்ட் உட்பட அனைத்துப் பத்திரிகைகளையும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா தெரிவித்தார். சிங்கள மற்றும் தமிழ் பத்திரிகைகளின் மொழி பெயர்ப்புகளுக்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் மேலும் கூறினார்.

சட்ட விரோத கள் விற்பனை

## விற்போரை தவிர்த்து நுகர்வோரை கைது செய்க

(குருநகர்)

''சட்ட விரோதமாக வீடுகளில் கள் விற்பனை செய்யும் எமது அங்கத்தவர்களைக் கைது செய்து கொண்டு செல்வதை நிறுத்துங்கள். பதிலுக்குப் பாவனையாளர்களைக் கைது செய்யுங்கள்''

கடந்த செவ்வாய்க்கிழமை மானிப்பாய் பிரதேசத்தில் நடைபெற்றதெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகளுக்கும் - காவல்துறையினருக்கும் இடையிலான கலந்துரையாடலின் போது முன்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

அக்கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''அங்கத்தவர்களின் முன்கண்ட செயலை முறியடிக்க அவர்களுக்குத் தண்டம் விதியுங்கள். அவர்களைக் கைது செய்து காவலில் வைப்பதால் தொழிலைத் தொடர்ந்தும் அவர்களால் செய்யமுடியாத நிலைமை தோன்றுகிறது.''

இவ்வாறு அந்தக் கோரிக்கையில் தெங்கு பனம் பொருள் உற்பத்தி - விற்பனை கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக மேற்பார்வையாளர் காவல்துறையினரிடம் கோரிக்கை விடுத்ததாக அறியப்படுகிறது. (21)

## காசநோய் வைத்தியசாலை மீள திறக்க நடவடிக்கை

[கொழும்புத்துறை]

யாழ்ப்பாண மாவட்டத்தில் மயிலிட்டி காசநோய் வைத்தியசாலையை மீண்டும் திறப்பதற்கான துரித நடவடிக்கைகளில் தற்போது யாழ், சுகாதாரப்பகுதியினர் செயற்பட்டு வருகின்றனர்.

கொழும்பிலிருந்து வரும் கப்பலில் இக்காச நோய் வைத்தியசாலைக்குரிய உபகரணங்கள் கொண்டு வரப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். குடாநாட்டில் காசநோயாளர்கள் அதிகரித்து வருவதனால் மிகக்கூடிய விரைவாக நாவற்குழி, கைதடிப்பகுதியில் இவ் ஆஸ்பத்திரியைத் திறப்பதற்கு சகல ஏற்பாடுகளையும் சுகாதாரப் பகுதியினர் கவனித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வைத்தியசாலை மயிலிட்டியில் செயற்பட்டு வந்த போது 58 ஊழியர்கள் கடமையாற்றி வந்தனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் 22 ஊழியர்கள் மட்டுமே கடமையாற்றி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## துறைமுக வேலைகள் ஸ்தம்பிதம்

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்குதுறையில் நடைபெற்று வரும் துறைமுகப்பகுதி திருத்த வேலைக்கு போதிய சீமெந்து கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப் படாததினால் துறைமுக மேடைத் திருத்த வேலைகள் ஸ்தம்பிக்கலாமென அஞ்சப்படுகிறது. (யோ)

---

மக்கள் வெளியேறினர்

(மன்னார்)

பேசாலையில் வீடுகளை இழந்து அகதி முகாமில் வாழ்ந்த குடும்பங்களில் சில அச்சத்தால் அகதி முகாமை விட்டு வெளியேறி பேசாலை பாத்திமா வித்தியாலயத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து கடந்த வருடம் தாயகம் திரும்பிய பேசாலைமக்களில்சிலர் தங்கள் வீடுகளில் பொலிசார் குடியிருந்ததால் அகதி முகாமில் வாழ்ந்து வந்தனர்.

அண்மையில் பேசாலையில் சில கடைகள் இனந்தெரியாத நபர்களால் எரிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஓலைக் கொட்டிலான அகதி முகாமும் எரிக்கப்படலாம் என்ற அச்சத்தினால் இவர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

தங்கள் சொந்த வீடுகளில் மீளக்குடியேற வழி செய்ய வேண்டும், அதுவரைதொடர்ந்தும் பாடசாலையில் இருக்கப்போவதாக அவர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

முடியாது என பொலிஸ் அதிகாரிகள் கைவிரித்துள்ளனர். தேர்தல் விவகாரங்களை கவனித்து வரும் பொலிசார் தம்மால் ஆயுதங்களை வழங்க முடியாது, ஆனால் வேட்பாளருக்கு முழு பாதுகாப்பு காரியொருவர் தனிப்பட்ட பாதுகாப்பிற்கென ஆயுதம் வழங்கும் விடயத்தில் பொலிசாருக்கு எந்தவிதஅதிகாரமும் கிடையாது. இது பாதுகாப்பு அமைச்சைப் பொறுத்த விடயம் எனக்கூறினார்.

## பட்டப்பகலில் வழிப்பறி ரூ. 5,55,000 கொள்ளை

### கொள்ளுப்பிட்டியில் சம்பவம்

[கொழும்பு]

கொள்ளுப்பிட்டியில் கடந்த திங்களன்று பட்டப் பகலில் 5,55,000 ரூபா வழிப்பறிக் கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. காரில் பயணம் செய்தவர்களிடமிருந்து துப்பாக்கி முனையில் பணம் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டையிலுள்ள தொழில் முகவர் நிலையஊழியர்கள் கொள்ளுப்பிட்டியிலுள்ள வங்கி ஒன்றில் பணத்தை இடுவதற்காக காரில் பணத்தை எடுத்துச் சென்றனர். முகவர் நிலைய ஊழியர் ஆறு பேர் காரில் இருந்தனர். டுப்பிளிக்கேஷன் வீதியில் மாநலமாக் கல்லூரி அருகில் கோர்டீனா காரில் வந்த கோஷ்டி ஒன்று முகவர் நிலையத்திற்குச் சொந்தமான காரை இடைமறித்துக் காசைக் கொள்ளை அடித்துள்ளது. கொள்ளைக் கோஷ்டியில் நான்கு பேர் இருந்தனர். துப்பாக்கியுடன் பாய்ந்த ஒருவர் பயமுறுத்திப் பணத்தைக் கொள்ளை அடித்துக் காரில் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஐக்கிய தேசிய கட்சி வன்முறையை நாடுகின்றது

### சிறிமாவோ குற்றச்சாட்டு

எமது சமூகம் அழிந்து கொண்டிருக்கிறது. 1977இல் துன்புறுத்தல், பழிவாங்குதலுடன் ஆரம்பமான ஐ.தே. கட்சியின் வன்முறைச் சக்கரம் சுழன்று கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். வன்முறையை ஐ.தே. கட்சியினர் விரும்பினார்கள். அதனை ஆதரிக்கவும் செய்தார்கள். வன்செயலிலும், துன்புறுத்தலிலும் ஈடுபட்டவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கினார்கள். அதற்கு ஜனாதிபதியே பலியாகியுள்ளார். இன்று எமது அரசியல்முறை ஈடாட்டம் கொண்டிருப்பதோடு சமூகமும் அழிவின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்த அரசியல் அமைப்பு முறை ஏற்புடையதல்ல. அரசியல் அமைப்புச் சட்டம் பல அதிகாரங்களை, வரம்பற்ற அதிகாரங்களை மையப்படுத்தியுள்ளது. இந்த அதிகாரங்கள் எவர் கையில் இருந்தாலும், அது ஆபத்தானது. மக்கள் பேசவே அஞ்சுகிறார்கள். இந்த நிலைமாறும் — இவ்வாறு சிறிமாவோ பண்டாரநாயக்கா ஐலண்ட் பத்திரிகைக்குவழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இப்போதுள்ள ஐ. தே. கட்சித் தலைமை ஜனநாயக பூர்வமாகச் செயற்படும் எனக் கூற முடியாது. பிரேமதாசா செய் தவற்றிற்கு அவர்களும் பொறுப்பானவர்கள் தான். நடந்து முடிந்த சம்பவங்களினால் தமது பிம்பத்தை இப் போது மாற்றப் பார்க்கிறார்கள்.

எங்களையும் பயமுறுத்தியுள்ளார்கள். இது பற்றி நாம் பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்திருக்கிறோம். அதே பூதங்கள் தான் எம்மையும் பயமுறுத்துகின்றன.

அதிகாரத்தில் இருக்க விரும்புபவர்கள் சிலர் பயமுறுத்தி வருவதாக திங்கள் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளர்கள் இந்த 'சிலர்' யார் என்று கேட்ட போது அதிகாரத்திலிருப்பவர்கள் அல்லது அதிகாரத்தைக் கைப்பற்ற விரும்புகிறவர்கள் என்றார் சிறிமாவோ.

ஐ.தே.கட்சிக்குள் உள் பூசல்கள் உள்ளன. வெற்றிடமாக உள்ள அமைச்சுகளுக்கும், பதவிக்கும் அதிகாரத்துக்குமான போட்டிகள் அக் கட்சிக்குள் நடைபெறுகின்றன.

லலித் கொலை விசாரணை சரியாக நடைபெறும் என்பதில் எனக்குச் சந்தேகம். விசாரணைகள் இப்போதே குழம்பியுள்ளன. பொலிஸ் மீது அழுத்தம் பிரயோகிக்கப்படும் போது, எப்படி விசாரணையில் நம்பிக்கை வைக்க முடியும்? ஜனாதிபதியின் கொலை விசாரணை எப்படி நடைபெறும் என்பது பற்றி எனக்குத் தெரியாது-இவ்வாறு சிறிமாவோ பண்டாரநாயக்கா மேலும் தெரிவித்தார்.

தேர்தல் கடமையின் போது

## காயமடையும் ஊழியருக்கு விசேட லீவு வழங்கப்படும்

(கொழும்பு)

மாகாணசபைத்தேர்தல் கடமையில் ஈடுபடும் அரச ஊழியர்கள் எவரும் நிரந்தர அங்கவீனமின்றி காயமுற்றால் அவருக்கு சம்பளத்துடன் கூடிய விசேட லீவு வழங்கப்படும் என பொதுநிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

காயமுற்றால் 6 மாதத்திற்கு ஒரு தடவை மருத்துவசபை சிபார்சில் பூரண சம்பளத்துடன் விசேட லீவு வழங்கப்படும். அத்துடன் அவர்களுக்கு வருடாந்த சம்பள அதிகரிப்பும் மற்றும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பாராளுமன்ற விசாரணை

## கோரப்படும்

லலித் அத்துலத்முதலியின் படுகொலை தொடர்பான விசாரணை நடத்தி உண்மையை கண்டறியுமாறு பாராளுமன்றத்தை தாம் கோரப் போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்

ஈழநாதம்

ஆரம்பம்

என்றும்,

யப்பான், ரஷ்யா ஆகிய நாடுகளில் ஆரம்ப பாடசாலை நேரத்தில் 15 சதவீதம் ஆரம்ப விஞ்ஞானக் கல்விக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் எமது நாட்டில் ஒரு கிழமைக்கு இரண்டு பாடங்கள் அல்லது பாடசாலை வேளையில் 5 சதவீதமே ஆரம்ப விஞ்ஞானத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப விஞ்ஞான ஆசிரியர்களுக்கு மாதத்தில் ஒரு முறையாவது சேவைக் காலப்பயிற்சி வழங்க வேண்டும். விஞ்ஞான ஆசிரியர் ஆலோசகர் தவணைக்கு ஒரு முறையாவது பள்ளிக் கூடங்களுக்கு விஜயம் செய்ய வேண்டும். மாணவர்களைக் கொண்டு கண்காட்சிகள் மற்றும் கிடைக்கும் பொருள்களைக் கொண்டுவிஞ்ஞானப் பரிசோதனைகளும் செய்யப்பட வேண்டும் என்றும் கூறினார்.

யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர்

## சுந்தரலிங்கத்தின் சேவைக்காலம் முடிவு?

வட மாநிலக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அவர்களின் சேவைக்காலம் இம்மாதம் 14 ஆம் திகதி நேற்றுடன் முடிவடைந்துள்ளது.

இவர் ஏற்கனவே தனது சேவைக் காலத்தை ஒரு வருடத்திற்கு அதிகரித்துத் தரும்படி கல்வியமைச்சைக் கோரியிருந்தார்.

இருந்தும் இதற்கான கல்வி அமைச்சின் அனுமதிக் கடிதமேதும் இதுவரை யாழ். பிரதேசக் கல்விப்பணிப்பாளருக்கு கிடைக்கப் பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

எனவே சுந்தரலிங்கத்திற்கு சேவை நீடிப்பு அனுமதி கிடைக்காவிட்டால் அடுத்த யாழ். பிரதேசக்கல்விப் பணிப்பாளர் யார் என்பது இன்னமும் அறிவிக்கப்படாமலேயே உள்ளது.

மேலும் சுந்தரலிங்கத்தின் வெற்றிடத்திற்குப் புதிதாக யாரும் கல்வியமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்களா என்பது பற்றி இதுவரை தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

(பா)

## விநியோகம்

இடம்பெயர்ந்துவந்து கோப்பாய் பிரதேசச் செயலகத்தின் எல்லைப் பரப்புக்குள் தங்கியிருப்போருக்கான உலர் உணவு முத்திரைகள் உடனடியாக விநியோகிக்கப்படவிருக்கின்றன. சகல கிராம அலுவலர்களும் தத்தம் பகுதியில் தங்கியிருப்பவர்கட்கான உலர் உணவு முத்திரைகளை இன்று பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் பிரதேசச் செயலகத்தில் பெற்றுச்சென்று ஞாயிற்றுக் கிழமையே விநியோகத்தை முடிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

## சுமுகமான அதிகார மாற்றம் வெளிநாடுகள் பாராட்டு

இலங்கையில் அதிகார மாற்றம் மிகவும் சுமுகமான முறையில் இடம்பெற்றமையை வெளிநாடுகள் பலவும் பாராட்டி இருப்பதாகக் கூறப்படுகின்றது. அரசியல் ஸ்திரத்தன்மைக்கு இது ஒரு உதாரணம் என்று சொள்ளப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. பிரேமதாசா கொல்லப்பட்ட பின்னர் அதிகாரக் கைமாற்றம் மிக சுமுகமாக நடைபெற்றதாகவும் கூறப்படுகின்றது.

கொழும்பிலிருந்து

குறைந்தது 8 கொப்பிகள் என்றாலும் தேவை என்ற அடிப்படையில் எடுத்துக்கொண்டாலும், குறைந்தது 16 இலட்சம் அப்பியாசக் கொப்பிகளாவது மாணவர்களுக்கு தேவை இந்நிலையில் யாழ். கல்வித் திணைக்களத்தால் கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்ட கொப்பியோ ஓர் இலட்சம் தான். இந்த கொப்பியை மாணவர்களுக்கு பகிர்ந்து வழங்குவதானால் அக்கொப்பிகளை தனித்தனி ஒற்றைகளாக கழற்றி ஒரு பாடத்திற்கு ஒருசிலஒற்றைகள் என்ற அடிப்படையிலேயேவழங்கவேபோதுமானதாக இருக்கும் என்ற அதிர்ச்சி தரும் விடயம்தெரிய வந்துள்ளது.

(சி)

ஆயர்

கள் என்றும் கூறப்படுகிறது.

மேலும் யாழ்ப்பாணம் வருவதற்கு முன்னர் புதிய ஜனாதிபதி திரு. டி. பி. விஜயதுங்காவை ஆயர் கென்னத் பெர்னாண்டோ சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார் என்றும் கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

ஆயர் கென்னத் பெர்னாண்டோவினது இல்லத்துக்குச் சென்றே திரு பிரட்மன் வீரக்கோன் இப் பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏசியா

மன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பின்போது பிரேமதாசா லஞ்சம் கொடுத்து உறுப்பினர்களை விலைக்கு வாங்கினார்என்றும், 1992இல் செய்தியாளர்கள் மீது நடாத்தப்பட்ட வன்முறைகளுக்கு பிரேமதாசாவே காரணம் என்றும் இந்த சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது.

முன்னர் ஒருசமயம் ஏசியா வீக் சஞ்சிகை ஜனாதிபதி பிரேமதாசாவின் தனிப்பட்ட கண்டனத்திற்கு உள்ளானது. பிரிட்டிஷ்இளவரசர் சார்ள்ஸ்-டயானா திருமண விருந்தில் கலந்துகொண்ட பிரேமதாசா நினைவுப் பொருளாக அங்கிருந்து சிறு பொருள்களைத் திருடியதாக ஏசியாவீக் செய்தி வெளியிட்டதே பிரேமதாசாவின் சீற்றத்திற்கு அச்சஞ்சிகை உள்ளானமைக்குக் காரணமாகும்.

## மரண அறிவித்தல்



### இராசதுரை சடாட்சரம்

நீர்வேலி வடக்கு மாசுவனைச் சேர்ந்த இராசதுரை சடாட்சரம் (உரிமையாளர், வீனஸ் தங்க மாளிகை, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.) 13-05-93 இல் காலமாகிவிட்டார். அன்னார் ஜெகசோதிமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசதுரை பாக்கியம் தம்பதிகளின் மகனும், இந்திராணி, கலாலோஜினி [கனடா], புவிச்சந்திரன் [வீனஸ் தங்கமாளிகை], புலேந்திரன் [சுவிஸ்], சதீஸ்வரன் (பல்கலைக்கழகம் கிளிநொச்சி) பிரதாபன் [பிரான்ஸ்], தனீஸ்வரன் [மாவீரர் 2 ஆம் லெப். சின்ன அல்பேட்], மகிந்தன், கவிதாலோஜினி, நிகிர்தாலோஜினி, நிர்மலாலோஜினி' மதனரூபன், யசிந்தாலோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், நித்தியானந்தன், சரவணபவன் (கனடா), வித்தியா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பஞ்சாட்சரம் [உரிமையாளர், அருள் முருகன் நகை மாளிகை], விமலபூசணி, காலஞ்சென்ற ஜீவகாருணியம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.


அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-05-93 இன்றுகாலை 10 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நீர்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்

## 5 ஆம் ஆண்டு நினைவாக...

## வீர வணக்கம்

இந்திய மேலாதிக்கப் படைகளின் நெடுங்கேணி முகாம் மீதான வேங்கைகளின் வெற்றிகரத் தாக்குதலின்போது விழுப்புண் அடைந்து, பின்னர் மருத்துவத்துக்காக கொண்டு சென்றபோது வீரச்சாவடைந்த மணலாறு மாவீரன், முல்லை. மாவட்டத்தின் முதலாவது லெப். கேணல் நவத்துக்கு எங்கள் வீர வணக்கம்.

வீரப் பிறப்பு: 2 - 2 - 1 9



வீரச் சாவு: 15 - 5 - 1 9 8

ஸ்ரீதர் திரையரங்கில்

In the Line of Duty

தினசரி மாலை 4 மணி, 6 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மாலை 4 மணி, 6 மணி
[சி-6575]

### அறிவித்தல்

சுதுமலை அம்மன் ஆலயத் திருவிழாக் காலத்திற்கான கடைகள் வழங்குதல், இன்று 15.05.1993 (சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு ஆலய வெளிவீதியில் நடைபெறும்.

நிர்வாகம்

(4860)

வன்னி மாவட்டத்தில் பணிபுரிய
பயிற்சி பெற்ற

### பெண் தாதிகள் தேவை

நேற்றைய பத்திரிகையில் வெளிவந்த மேற்படி விளம்பரத்தில் 15-05-93இல் நடைபெற இருந்த நேர்முகத் தேர்வு தவிர்க்க முடியாத காரணங்களால் 17-05-93ற்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம். (4887)

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின்

மாதர் சங்க

## இராசதுரை சடாட்சரம்

நீர்வேலி வடக்கு மாசுவனைச் சேர்ந்த இராசதுரை சடாட்சரம் (உரிமையாளர், வீனஸ் தங்க மாளிகை, கஸ்தூரியார்வீதி. யாழ்ப்பாணம்.) 13-05-93 இல் காலமாகிவிட்டார். அன்னார் ஜெகசோதிமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசதுரை பாக்கியம் தம்பதிகளின் மகனும், இந்திராணி, கலாலோஜினி [கனடா], புவிச்சந்திரன் [வீனஸ் தங்கமாளிகை], புலேந்திரன் [சுவிஸ்], சதீஸ்வரன் (பல்கலைக்கழகம் கிளிநொச்சி) பிரதாபன் [பிரான்ஸ்], தனீஸ்வரன் [மாவீரர் 2 ஆம் லெப். சின்ன அல்பேட்], மகிந்தன், கவிதாலோஜினி, நிகிர்தாலோஜினி, நிர்மலாலோஜினி' மதனரூபன், யசிந்தாலோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், நித்தியானந்தன், சரவணபவன் (கனடா), வித்தியா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பஞ்சாட்சரம் [உரிமையாளர், அருள் முருகன் நகை மாளிகை], விமலபூசணி, காலஞ்சென்ற ஜீவகாருணியம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.


அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-05-93 இன்றுகாலை 10 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நீர்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் ;
புவிச்சந்திரன் (சந்துரு)
(மகன்)

[4873]

---

## உனது
## முதலாம் ஆண்டு நிறைவில்
## எமது கண்ணீர் அஞ்சலி



வீரப்பிறப்பு
18 - 06 - 1966

வீரச்சாவு
15 - 05 - 1992

### 2-ம் லெப்டினனட் நிலான்

(வைத்திலிங்கம் ஜெயகாந்தன்-
கொம்மாதுறை மட்டக்களப்பு)

நிலமாளக் களம் புகுந்த நிலான் - நீ
களமதனில் எதிரியை வென்றாய் - ஆனால்
ஈழம் மலரும் முன்பே - நீ
எமை விட்டுப் பிரிந்தாய் - ஆனால்
ஓராண்டு சென்றாலும் - நீ
ஈழத்தாயின் நெஞ்சைவிட்டு நீங்காய்.

உமது பிரிவால் துயருறும்,
அப்பா, சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

சே. வைத்திலிங்கம்,
5- சந்தி,
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

( 4881 )

---

வீரப் பிறப்பு: 2 - 2 - 1961



வீரச் சாவு: 15 - 5 - 1989

# லெப்-கேணல் நவம் (டடி)

## (செல்லப்பெருமாள் - அருமைராசா)

### கொக்குத்தொருவாய்.

நெடிதுயர்ந்து நின்ற மலையிவன்
நெஞ்சில் விடுதலை சுமந்த புலியிவன்
விடிவு தேடியே வீசிய காற்றிவன்
விந்தை யாயிரம் செய்த ஆற்றலன்
கொடிய எதிரியின் பாசறை மீதிலே
கொள்ளி வைத்த டடியின் நினைவுகள்
படியும் நெஞ்சுடன் முல்லைமண் நிமிர்ந்திடும்
பற்றைக் காடுகள் கூடவே போரிடும்.

★

தலைவன் மீதிலே.. பற்றும்; விடுதலைத்
தாகத் தோடு போரிடும் வேகமும்,
முலையருந்திய வீரமும், உன்னிடம்
மூண்ட நெருப்பென எதிரியைச் சுட்டது.
வலை இழுத்திடும் மக்களும்; முல்லையின்
வயல் வெளிகளில் உழுதிடும் மக்களும்,
நிலை யெடுத்துவுன் நினைவுடன் நிற்கிறோம்.
நிச்சயம் தமிழ் ஈழத்தைக் காணுவோம்.

★

என்றும் உன் நினைவைச் சுமக்கும்
**முல்லை மாவட்ட மக்கள்.**

[4884]

---

சுதுமலை அம்மன் ஆலயத் திருவிழாக் காலத்திற்கான கடைகள் வழங்குதல், இன்று 15.05.1993 (சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு ஆலய வெளிவீதியில் நடைபெறும்.

நிர்வாகம்

(4860)

---

வன்னி மாவட்டத்தில் பணிபுரிய
பயிற்சி பெற்ற
## பெண் தாதிகள் தேவை

நேற்றைய பத்திரிகையில் வெளிவந்த மேற்படி விளம்பரத்தில் 15-05-93இல் நடைபெற இருந்த நேர்முகத் தேர்வு தவிர்க்க முடியாத காரணங்களால் 17-05-93ற்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம். (4887)

---

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின்
## மாதர் சங்க
## கட்டட நிதிக்காக

15 05-1993 சனிக்கிழமை
இன்று மாலை 6 30 மணியளவில்
ஈச்சமோட்டை மைதானத்தில்
பாஷையூர் பிரகாஸ் நாடக மன்றத்தினர்
பெருமையுடன் வழங்கும்
**"கண்டி அரசன்"**
(நாட்டுக்கூத்து)
மற்றும்
அக்கடமி ஒவ் ஓரியன்ரல் மார்சல் ஆட்ஸ்
சோட்டோக்கான் கராட்டி கழகம் வழங்கும்
**கராட்டி கண்காட்சிகள்**
நடைபெறும்.
இந்நிகழ்ச்சிகள் அனைத்தும்
**S. V. முருகேசு**
வர்த்தக ஸ்தாபனத்தாரின் ஆதரவில் இடம்பெறும்.
( யாழ்ப்பாணம். )
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி/6630) – மாதர்சங்க நிர்வாகிகள்.

---

## உள்வந்த வெளிச்சென்ற
## வாகன இலக்கங்கள்
## 14-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9447

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:
26-6075, 41-8432, 26-3390, 41-9855, 24-5774, 27-9416, 22-4895, 43-3576, 28-0523, 26-6309, 41-5979, 28-0248, 26-7949.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
27-4920, 27-6563, 27-2088, 27-1141, 27-7263, 28-8951, 26-3412, 26-4726, 26-4376, 26-0672, 26-4882, 26-3638, 42-0733, 42-3993, 41-7297, 41-4194, 24-8710, 24-5703.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு மே மாதம் 15 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.